ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2313/41 - 2023 ජනවාරි මස 04 වැනි බදාදා - 2023.01.04

*2313/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 154 இ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகத்தினை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) (அ) ஆம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் விசாரணை*

மேல் மாகாணத்தின் ஆளுநர் றொஷான் குணதிலக ஆகிய நான் அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 154 இ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியத்திச்சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் மற்றும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்கிய வகையில் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க பின்வரும் விடயங்கள் காரணமாக மஹரகம நகர சபை மற்றும் மஹரகம நகர சபையின் தவிசாளராக செயற்பட்ட போது மேற்கூறிய மேல் மாகாணத்தின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி தாபனங்களின் நிர்வாகத்தை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியத்திச்சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் தவறான நடவடிக்கை மற்றும் 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1) உப பிரிவின் கீழ் காட்டப்படும் தவறுகள் இழைக்கப்பட்டுள்ளனவா என்று விசாரணை செய்து 03 மாதங்களினுள் அறிக்கை ஒன்றினை முன் வைப்பதற்காக தனி நபர் விசாரணை சபை ஒன்றாக ஓய்வு பெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி திரு. சந்திரதாச நானாயக்கார அவர்களை நியமிக்கின்றேன்.

---

1A - PG 6148 — 11 (2023/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*மஹரகம நகர சபையின் தவிசாளருக்கு உரியதாக விசாரணை செய்ய வேண்டிய விடயம்/ குற்றச்சாட்டுக்களாவன,*

*01.* *மஹரகம நகர சபையின் தவிசாளராக செயற்பட்டு மஹரகம நகர சபைக்குரிய சியம்பலா கஹா காணியின் முன்பக்க தரிப்பிடத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூற்று இருபத்தேழு ரூபா ஒரு சதம் (ரூபா 550,827.01) நிதி அல்லது அதற்கு சமமான தொகையை மஹரகம நகர சபையின் அங்கீகாரமின்றி மஹரகம நகர சபையின் நிதியத்திலிருந்து செலவு செய்து அல்லது செலவு செய்ய நடவடிக்கை எடுத்து 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் காட்டப்படும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்று.*

*02.* *மஹரகம நகர சபையின் தவிசாளராக செயற்பாட்டு மஹரகம நகர சபையினால் 2022.01.01 இல் இருந்து அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்ட பின்வரும் அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்பந்தத்தில் ஈடுபடாது மற்றும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை தொடர்ந்து தாமதப்படுத்தி 255 ஆம் அதிகாரமான நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 19(3) ஆம் உப பிரிவு இன் கீழ் பணிக்கப்பட்ட விடயங்கள் மேற்கொள்வதை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தியமை.*

மேலே குறிப்பிட்ட திட்டங்கள்,

I. *தலபத்பிட்டிய தெல்கஹவத்த இறுதிப் பகுதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்தல் ரூ. 1,900,000.00*
II. *உடஹமுல்ல தியகடஹேன வீதி நடுகார தோட்ட புண்ணிய கிணறை புனரமைப்பு செய்தல் ரூ. 630,000.00*
III. *உடஹமுல்ல சரணபால நாஹிமி மாவத்தையில் வயலுக்கு அருகில் வீட்டு வரி இலக்கம் 89/ 2 வீட்டின் அருகாமையில் இருந்து முன்னோக்கி பக்கச்சுவர் நிர்மாணம் (முதலாம் கட்டம்) ரூ. 1,700,000.00*
IV. *மிரிஹான போதிய வீதி, சல் கஹா ஒழுங்கையின் வடிகால் அமைத்தல் ரூ. 125,000.00*
V. *உடஹமுல்ல சரணபால நாஹிமி மாவத்தையில் வயலுக்கு அருகில் வீட்டு வரி இல. 89/ 2 வீட்டின் அருகாமையில் இருந்து முன்னோக்கி பக்கச்சுவர் நிர்மாணித்தல் (இரண்டாம் கட்டம்) ரூபா 1,000,000.00*

*03.* *மஹரகம நகர சபையின் தலைவராக செயற்பட்டு 2021.11.23 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்தில் இலக்கம் 365, சாந்தி மாவத்தை, மகும்புர, பன்னிப்பிட்டியவில் அமைந்துள்ள தனியார் சொத்துக்களுக்கு பிரதான மின் இணைப்புக்கு புறம்பாக அனுமதியின்றி மின்சாரம் பெற்றது தொடர்பில், மஹரகம நகர சபையின் தலைவர் என்ற ரீதியில், தனியார் சொத்திற்கு அனுமதியற்ற முறையில் ஊடகங்களுக்கு பொய்யான அறிக்கையை சமர்ப்பித்து பொதுமக்களை தவறாக வழிநடத்தி அத்துடன்/ அல்லது மஹரகம நகர சபைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டு எழுத்து மூலமான அதிகாரத்தின் கீழ் மஹரகம நகர சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியுள்ளமை.*

*04.* *மஹரகம நகர சபையின் தலைவராக இருந்த போது 2021.09.24 ஆந் திகதி நடைபெற்ற நகர சபை பொதுச் சபை கூட்டத்திற்குரிய, நிகழ்ச்சி நிரலில் 5.1.12 ஆம் இலக்கம் கொண்ட உருப்படி உட்பட நகர சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட செலவுகள் மற்றும் தொடர்புடைய செலவுகள் மஹரகம நகர சபை, அங்கீகரிக்காதிருந்த வேளையில் உரிய செலவுகளை சபை அங்கீகரித்த செலவுகளாக கருதிச் செயற்பட்டு 255 ஆம் அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 184 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட நகர சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை முறையற்ற ரீதியில் பயன்படுத்தியமை.*

*05.* *மஹரகம நகர சபையின் தலைவராகச் செயற்பட்டு மஹரகம நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் மாகும்புற தகனக் கிரியைச் சாலையின் நிர்மாணத்திற்கு உரியதாக ரூபா மூன்று கோடி ஐம்பத்து ஏழு இலட்சம் (ரூபா 35,700,000.00) அல்லது அதற்கு அண்மித்த பெறுமதி உள்ள ஒப்பந்தம் ஒன்றை விளம்பர அறிவிப்பின் மூலம் கேள்வி கோரலின்றி மேற்கொண்டு 255 ஆம் அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 40 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டு மஹரகம நகர சபையின் தலைவர் என்ற வகையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையற்ற ரீதியில் பயன்படுத்தியுள்ளமை.*

*06.* *நீங்கள் மஹரகம நகர சபையின் தலைவராகச் செயற்பட்டு மஹரகம நகர சபை அதிகாரப் பிரதேசத்தினுள் மாகும்புற தகனக் கிரியைச் சாலையின் நிர்மாணத்திற்குரிய ஒப்பந்தம் தொடர்பாக சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது மாக்கும்புற தெற்கு மெத்சித் சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் மற்றும் சுமேதா சிரேஷ்ட பிரஜைகள் சங்கங்களுடன் ஒப்பந்தங்களுக்கு வர சடவடிக்கை எடுத்து 255 ஆவது அதிகாரமான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 39 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்டு மஹரகம நகர சபையின் தலைவர் என்ற வகையில் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முறையற்ற ரீதியில் பயன்படுத்தியுள்ளமை.*

மேலும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 184(1அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க, விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் ஒருவருக்கு காணப்படும் அதிகாரங்கள் இந்த தனிநபர் ஆணைக்குழுவிற்கு உரித்தாகுவதுடன், மேற்கூறப்பட்ட விடயங்களை விசாரணை செய்யும் போது உரியதாக்கிக்கொள்ள வேண்டியவை என இனங்காணப்பட்ட எழுத்து மூலமான மற்றும் வாய் மூலமான சாட்சிகள் பின்வரும் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதனை மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அண்ட் கார் வீஎஸ்வி யூஎஸ்பி
பீஎச்டி எப்ஐஎம் (ஸ்ரீ லங்கா)
என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்
ஆளுநர்
மேல் மாகாணம்.

பத்தரமுல்லை,
மேல் மாகாண சபை கட்டடத்தில் அமைந்துள்ள,
மேல் மாகாண ஆளுநர் காரியாலயத்தில்,
2023, திசெம்பர் 29.

EOG 01-0019